செ.வெ.எண்.118/2018, நாள்: 16.03.2018

# உணவு பாதுகாப்பு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் பரிசளிப்பு விழா

காஞ்சிபுரம் மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின் சார்பாக மாவட்ட விளையாட்டரங்கில் உணவு பாதுகாப்பு மேலாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் பரிசளிப்பு விழா மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின் நியமன அலுவலர் மரு.அ.இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் திரு.வி.ஜெயக்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். காஞ்சிபுரம் நகரை சார்ந்த பல்வேறு பள்ளிகளிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவியர் இவ்விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டனர். உணவு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மாணவரிடையே பரப்பும் நோக்கில் ஓவியப்போட்டி, பேச்சு போட்டி மற்றும் வினாடி வினா போட்டி நடத்தப்பட்டது. மாணவர்கள் ஆர்வமுடனும்,உத்வேகத்துடனும் போட்டிகளில் கலந்து கொண்டனர். சிறப்பான முறையில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட நியமன அலுவலர் மற்றும் மாவட்ட சுகாதார துணை இயக்குநர் மரு.செந்தில்குமார் முன்னிலையில் திட்ட இயக்குநர் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

திட்ட இயக்குநர் தனது சிறப்புரையில் மாணவர்கள் தன் சுத்தத்தை பராமரிக்க வேண்டும் எனவும், கை கழுவும் பழக்கத்தை கடைபிடிப்பதின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். மேலும் மாணவர்கள், சத்தான உணவுகளையே உண்ண வேண்டும் எனவும், துரித உணவுகளையும், சுகாதாரமற்று உணவுகளையும் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும் பள்ளி ஆசிரியர்கள் பள்ளிக்கு அருகில் உள்ள கடைகளில் விற்கப்படும் மாணவர்கள் விரும்பி உண்ணும் உணவுகளை கண்காணித்திடல் வேண்டும் என்றும், அத்தகைய கடைகளில் கலப்பட உணவுகளோ, தடை செய்யப்பட்ட உணவு வகைகளோ அல்லது காலாவதியான உணவு வகைகளையோ மாணவர்கள் தவிர்க்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் விற்கப்படுவது தெரிய வந்தால், உணவு பாதுகாப்பு துறையின் வாட்ஸ் ஆப் புகார் எண்ணான 94440 42322 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம் என தெரிவித்தார்.

இம்முகாமின் போது மாணவர்களிடையே கலப்பட உணவு பற்றிய தெளிவை ஏற்படுத்திட கண்காட்சியும், எளிய செயல்முறை விளக்கமும் செய்து காட்டப்பட்டது.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.